ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 4.5 – தூம்புடை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.5 – தூம்புடை

‡ தூம்புடைப் பனைக் கை வேழம் ⋆
துயர் கெடுத்தருளி ⋆
மன்னு காம்புடைக் குன்றம் ஏந்திக் ⋆
கடு மழை காத்த எந்தை ⋆
பூம் புனற் பொன்னி முற்றும் புகுந்து ⋆
பொன் வரண்ட ⋆
எங்கும் தேம் பொழில் கமழும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.1** ‖

கவ்வை வாள் எயிற்று வன் பேய்க் ⋆
கதிர் முலை சுவைத்து ⋆
இலங்கை வவ்விய இடும்பை கூரக் ⋆
கடுங்கணை துரந்த எந்தை ⋆
கொவ்வை வாய் மகளிர் கொங்கைக் ⋆
குங்குமம் கழுவிப் போந்த ⋆
தெய்வ நீர் கமழும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.2** ‖

மாத் தொழில் மடங்கச் செற்று ⋆
மறுதிற நடந்து ⋆
வன் தாள் சேத்தொழில் சிதைத்து ⋆
பின்னை செவ்வித் தோள் புணர்ந்த எந்தை ⋆
நாத் தொழில் மறை வல்லார்கள் ⋆

நயந்தறம் பயந்த ⋆
வண் கைத் தீத் தொழில் பயிலும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.3** ॥

தாங்கரும் சினத்து வன் தாள் ⋆
தடக் கை மா மருப்பு வாங்கி ⋆
பூங்குருந்தொசித்துப் புள் வாய் பிளந்து ⋆
எருதடர்த்த எந்தை ⋆
மாங்கனி நுகர்ந்த மந்தி ⋆
வந்து வண்டிரிய ⋆
வாழைத் தீங்கனி நுகரும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.4** ॥

கரு மகள் இலங்கை ஆட்டி ⋆
பிலங்கொள் வாய் திறந்து ⋆
தன் மேல் வரும் அவள் செவியும் மூக்கும் ⋆
வாளினால் தடிந்த எந்தை ⋆
பெரு மகள் பேதை மங்கை ⋆
தன்னொடும் பிரிவிலாத ⋆
திருமகள் மருவும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.5** ॥

கெண்டையும் குறளும் புள்ளும் ⋆
கேழலும் அரியும் மாவும் ⋆
அண்டமும் சுடரும் ⋆
அல்லா ஆற்றலும் ஆய எந்தை ⋆
ஒண் திறல் தென்னன் ஓட ⋆
வட அரசோட்டம் கண்ட ⋆

திண் திறலாளர் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.6** ॥

குன்றமும் வானும் மண்ணும் ⋆
குளிர் புனல் திங்களோடு ⋆
நின்ற வெம் சுடரும் ⋆
அல்லா நிலைகளும் ஆய எந்தை ⋆
மன்றமும் வயலும் காவும் ⋆
மாடமும் மணம் கொண்டு ⋆
எங்கும் தென்றல் வந்துலவும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.7** ॥

சங்கையும் துணிவும் பொய்யும் ⋆
மெய்யும் இத் தரணி ஓம்பும் ⋆
பொங்கிய முகிலும் ⋆
அல்லாப் பொருள்களும் ஆய எந்தை ⋆
பங்கய முகுத்த தேறல் ⋆
பருகிய வாளை பாய ⋆
செங்கயல் உகளும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ॥ **4.5.8** ॥

பாவமும் அறமும் வீடும் ⋆
இன்பமும் துன்பம் தானும் ⋆
கோவமும் அருளும் ⋆
அல்லாக் குணங்களும் ஆய எந்தை ⋆
மூவரில் எங்கள் மூர்த்தி ⋆
இவன் என முனிவரோடு ⋆

தேவர் வந்திறைஞ்சும் நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானே ‖ **4.5.9** ‖

‡ திங்கள் தோய் மாட நாங்கூர்த் ⋆
திருமணிக்கூடத்தானை ⋆
மங்கையர் தலைவன் வண் தார்க் ⋆
கலியன் வாய் ஒலிகள் வல்லார் ⋆
பொங்கு நீர் உலக மாண்டு ⋆
பொன் உலகாண்டு ⋆
பின்னும் வெங்கதிர்ப் பரிதி வட்டத்தூடு போய் ⋆
விளங்குவாரே ‖ **4.5.10** ‖

அடிவரவு — தூம்பு கவ்வை மாத்தொழில் தாங்கரும் கருமகள் கெண்டை குன்றம் சங்கை பாவம் திங்கள் தாவளந்து

தூம்புடை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்